**O.S.No. 232/2013**

**PW1 : பாலசுப்பிரமணியம்** தேதி 09.07.2025

**வாசா1 மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் நான் தாவா சொத்தின் விவரத்தை திருத்தம் செய்யப்பட்டதில் மனு அனுமதிக்கபட்டு திருத்தம் செய்தேன் என்றால் சரிதான். ஏற்கனவே அசல் பிராதில் ஒரு ஐயிட்டம் தான் சொல்லியிருந்தேன். அதன் பின்னிட்டு கிரைய பத்திரத்தில் 2 ஐயிட்ட சொத்துக்களை சேர்த்தேன். கிரைய பத்திரப்படி மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 5 1/4 சென்ட். அது பொதுவில் சொல்லியிருக்கிறேனா என்றால் தனிப்பட்ட முறையில் செக்குபந்தியுடன் வாங்கியிருக்கிறேன். வடபுறம் 1 - 3 பிரதிவாதிகளின் சொத்து உள்ளது என்றால் சரிதான். 180/1 ஏ ல் 1 – 3 பிரதிவாதிகளின் குடியிருப்பு வீடு உள்ளது என்றால் சரிதான். 180/2 ஏ 1- 3 பிரதிவாதிகளின் தறி குடோன் உள்ளது. கிழபுறம் பொது கிணறு உள்ளது. அது 180/2 பி ல் உள்ளது. 1 – 3 பிரதிவாதிகள் 180/1 ஏ, 180/2 ஏ ,180/2 சி ஆகியவற்றை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அத்து மட்டும் நிர்ணயிக்க வேண்டும். அவர்கள் அனுபவிப்பதை நான் ஆட்சேபணை செய்யவில்லை. அதன் அடிப்படையில் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.